**தலைப்பு 163 – உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, தலைப்பு 163 - உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிருபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 163 – உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளது. இவை அவதானிக்கப்பட்டன.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127(1) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செயற்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி செயற்பாடுகளும் திட்டமிடப்படல். | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப் படாமை.<br>2. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை | 2.9<br>2.1.1 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமை ஒன்று தயாரித்து கொள்ளல். | 1. இணக்கமின்மைகள்<br>2. மனித வள முகாமைத் துவத்தில் பலவீனங்கள் | 2.10<br>2.11 |

| | | | |
|---|---|---|---|
| 127(2) | தனது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங் களில் அப்போதைக்கு இருக்கும் செலவு விடயங்கள் உட்பட புதிதாக அல்லது மிகையாக செலவிடுவதற்கான பிரேரணைகள் சிக்கனமாகவும் மற்றும் செயற்திறனாக அமைச்சில் கூர்மையான பரிசோதனை மேற்கொள்ள ப்பட வேண்டும். | பெறுகை செயற்பாடு களை செயற்படுத்து வதிலுள்ள குறைபாடு கள் | 2.3 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத் தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்ற தெனவும் | 1. சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை | 2.4(ஆ) |
| | | 2. கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல். | 2.4.(ஈ) |
| | | 3. பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் | 2.5 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக் கப்படுகின்றன எனவும் மற்றும் தாம் அவற்றில் கையொப்ப மிடுவதற்கு முன்னர் அமைச்சி னால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவின த்திற்கு இடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடுகள் தம்மால் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்படல். | பொது வைப்புக் கணக்குகளில் குறைபாடு | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடு களில் நிதி ஏற்பாடு மற்றும் செலவினத்திற்கிடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 1. ஒதுக்கீடு செய்த ஏற்பாடு களைப் பயன்படுத்தாமை<br>2. மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை | 2.6(அ)<br>2.6(ஆ) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர் களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டண ங்கள் சேகரிக்கும் செயற்பாடு களை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோக த்தர்களுக்கு முற்பணக் கணக்கில் உள்ள குறைபாடுகள் | 2.7 |
| 127(7) | உத்தியோகத்தர்கள்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடி யால் அரசிற்கு நட்டங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரை பிரமாணங்களில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் கடைபிடிக்கப் பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்த நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோ கத்தர்கள்/ ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிப்பதற்கும், கண்காணி க்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருப்பின் தனக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக் கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருத ப்படும் அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்று | கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் | 2.4(ஈ) |

வதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவு படுத்துவதற்கும் நியாய ப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்து ழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த ரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல்.

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் இற்றைவரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது கடமையாற்றும் பதவியணி தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கருமங்களை நிறைவேற்றாமை

**எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

(அ) மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்ட மற்றும் மீளாய்வாண்டின் போது முற்றாக பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட அங்கம்பொற கிராமத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம், குடிநீர் திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி அலுவல்கள் ஆகிய 03 செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம் 10 சதவீதம் முதல் 50 வரை பலவீன மட்டத்தில் காணப்பட்டது. அந்த செயற்திட்டங்களை முற்றாக பூர்த்தி செய்வதற்கான வருடாந்த ஏற்பாடுகளில் 75 சதவீதத்தை விட மிகையான தொகை ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆண்டின் போது அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் கலாச்சார நிலையமொன்று நிறுவும் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக அமைச்சில் நிர்மாண வேலை பிரிவு ஒன்று நிறுவப்பட்டது. நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் அலுவல்கள் அந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. 1998 ஆண்டு முதல் 2018 ஏப்ரல் 20 திகதி அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கலாச்சார நிலையங்களில் எண்ணிக்கை 182 தொகையாக காணப்பட்டதுடன் 34 கலாச்சார நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. 2017 திசெம்பர் 31 திகதி அளவில் 110 பிரதேச செயலக பிரிவுகளில் கலாச்சார நிலையங்கள் நிர்மாணவேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) பிரதேச செயலக பிரிவுகளில் கலாச்சார நிலையங்களில் நிர்மாணிக்கும் போது ஏற்பட்டிருந்த காணிச் சச்சரவுகள், காணி மண்சரிவு போன்ற காரணங்களினால் 06 நிலையங்கள் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதற்காக ரூபா 19.08 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் ரூபா 2.27 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கலாச்சார நிலையம் மாவட்ட செயலாளரின் கோரிக்கையின் படி நடமாடும் நீதிமன்றம் ஒன்றிற்காக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) அமைச்சினால் ரூபா 144,790,238 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 13 நிலையங்களின் நிர்மாண அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் அளவிலும் திறக்கப்பட்டிருக்கவில்லை.

**வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள்**

வடமேல் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் 2017 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயற்திட்டங்களில் பௌதீக முன்னேற்றத்தின் பிரகாரம் ரூபா 20.7 மில்லியன் பெறுமதியான 03 செயற்திட்டங்கள் தொடர்வேலையாக ஆகி உள்ளது. 2018 செப்தெம்பர் 30 திகதி அளவில் அவற்றில் ஒரு செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 70 சதவீதம் காணப்பட்டதுடன் ஏனைய செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 100 சதவீதமாக இருந்தது.

(ஆ) கிராமிய பாதைகள் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிரய மதிப்பீட்டின் பெறுமதி ரூபா 12,003,205 இற்கான 10 செயற்திட்டங்கள் இரத்து செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 837,521 தொகை பெறுமதியான 01 சிறு நகர செயற்திட்டம் இரத்து செய்யப்பட்டிருந்தது.

## 2.3 பெறுகை செயன்முறை மூலம் வழங்கள், சேவைகளை பெற்றுக்கொள்ளல்

அமைச்சினால் அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் படி செயற்பட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 734.74 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்ததுடன் அவற்றில் ரூபா 566.20 மில்லியன் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் கட்டிட நிர்மாணித்தல் செலவு விடயத்தின் கீழ் ரூபா 659 மில்லியன் தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 166 மில்லியன் தொகை பயன்படுத்தப்படாமல் சேமிப்பாகக் காணப்பட்டதுடன் அவை ஒதுக்கிய ஏற்பாடுகளில் 25 சதவீதமாகும்.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை

2002 பெப்ரவரி 25 திகதி 1/2002 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சுக்கு சொந்தமான 68 வாகனங்களில் அரச இலட்சினை பதித்திருக்கவில்லை.

### (ஆ) வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்துதல்

நிதிப் பிரமாணம் 1647(அ) இன் பிரகாரம் அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களின் தொடர்பாக கணிப்பீடு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### (இ) உரித்தாக்கப்படாத சொத்துக்கள் முறைசாராத விதமாக பயன்படுத்துதல்

நாடு பூராகவும் அமைந்துள்ள 166 கலாச்சார நிலையங்களில் பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 400,283,087 தொகையாக காணப்பட்டதுடன் அந்த காணிகளின் உரிமையை 2017 திசெம்பர் 31 திகதி வரை அமைச்சிற்கு உரித்தாக்கியிருக்கவில்லை.

## 2.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

**பொது மக்களுக்கான சேவைகள் நிறைவேற்றுதல்**

2008 பெப்ரவரி 06 ஆம் திகதி 05/2008 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் தனது நிறுவனத்திற்காக பிரஜைகள் நியதிச் சட்டத்தை அறிமுகப்படுத்தி செயற்படுத்த வேண்டுமெனினும் அவ்வாறான தொன்று தொடர்பாக அமைச்சு அறிந்திருக்காததுடன் சுற்றறிக்கையில் அடங்கிய ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.6 செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 634.48 | 562.53 | 71.95 | 11.33 |
| | மூலதன | 529.40 | 473.68 | 55.72 | 10.52 |
| | **மொத்தம்** | **1,163.88** | **1036.21** | **127.67** | |
| 2014 | மீண்டுவரும் | 658.64 | 649.80 | 8.84 | 1.34 |
| | மூலதன | 663.70 | 377.95 | 285.75 | 43.05 |
| | **மொத்தம்** | **1,322.34** | **1,027.75** | **294.59** | |
| 2015 | மீண்டுவரும் | 889.20 | 820.48 | 68.72 | 7.72 |
| | மூலதன | 3,523.74 | 503.64 | 3,020.10 | 85.70 |
| | **மொத்தம்** | **4,412.94** | **1,324.12** | **3,088.82** | |
| 2016 | மீண்டுவரும் | 853.01 | 827.08 | 25.93 | 3.03 |
| | மூலதன | 4,286.34 | 2,035.39 | 2,250.95 | 52.51 |
| | **மொத்தம்** | **5,139.35** | **2,862.47** | **2,276.88** | |
| 2017 | மீண்டுவரும் | 941.46 | 886.02 | 55.44 | 5.88 |
| | மூலதன | 4,109.25 | 2,701.00 | 1,408.25 | 34.27 |
| | **மொத்தம்** | **5,050.71** | **3,587.02** | **1,463.69** | |

கடந்த 05 ஆண்டுகளில் ஒதுக்கியிருந்த மூலதன ஏற்பாடுகளில் கணிசமான அளவு வருடாந்தம் பயன்படுத்தப்படாமல் காணப்படும் நிலைமை ஒன்று மேற்கூறிய பகுப்பாய்வின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அவற்றில் அதிகமான ஏற்பாடுகளின் சேமிப்பு 2015 ஆண்டின் போது அவதானிக்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

03 மூலதன செலவு விடயங்களில் ஒதுக்கியிருந்த ரூபா 26.25 மில்லியன் இற்கான மொத்த தேறிய ஏற்பாடுகளின் எதனையும் பயன்படுத்தாமல் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை ஏற்பாடுகள் ஒதுக்கியிருத்தல்**

04 மூலதன செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 1,006.25 மில்லியனிற்கான மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த காரணத்தினால் அந்த செலவு விடயங்கள் தொடர்பாக ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 294.66 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி சேமிப்பு, ஒதுக்கியிருந்த தேறிய ஏற்பாடுகளில் 52 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான வீச்சு தொகையை கொண்டிருந்தது.

**2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 16301 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 38 | 43.87 | 23 | 32.03 | 120 | 98.50 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன்மீதி தவிர ரூபா 1,422,145 தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை கடன் மீதி 01 வருடம் முதுல் 05 வருடங்கள் வரையான காலவீச்சு முதல் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு அமைச்சுக்கு இயலாதிருந்து.

### 2.8 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழ் காணப்படும் 05 பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 66.45 மில்லியன் தொகையாகும். அம்மீதயில் 02 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 1,224,592 தொகையான 5 வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.9 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளது வரை ஆக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |

### 2.10 இணக்கமின்மைகள்

#### 2.10.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் ஏற்பாடுகளுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | ரூபா. | |
| நிதிப் பிரமாணம் 104(1)(அ) | 1,578,336 | மீளாய்வாண்டின் போது இரண்டு மோட்டார் வண்டிகளுக்கு 03 சந்தர்ப்பங்களில் விபத்துக்கள் ஏற்பட்டிருந்ததுடன் மொத்த நட்டம் மற்றும் விபத்துக்கான காரணத்தை நிச்சயிப்பதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை கண்டறியவதற் காகவும் விசாரணை மேற் கொண்டிருக்கவில்லை. 02 விபத்துக்கள் தொடர்பாக விசாரணை |

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்டது என அறிவித்திருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்துவதாக குறிப்பிட்ட விசாரணை அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| **(ஆ)** | **2015 ஜூன் 10 திகதிய 2/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை** | |
| | 2 ஆம் பந்தி | மேற்கூறிய சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் படி வழங்கிய நாள் முதல் 03 மாதங்களுக்குள் வாகனங்களை அகற்றுதல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஒன்றென அறிவித்திருந்த போதிலும் அகற்றுவதற்கு இனங்காணப்பட்ட 06 வாகனங்கள் 2017 திசெம்பர் 22 திகதி அளவிலும் அகற்றப்பட்டிருக்கவில்லை. |
| | 5 ஆம் பந்தி | அந்த சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் அகற்றுவதற்கு உரிய வாகனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து அவற்றின் குறைந்த விலையை குறிப்பிடுவதற்கு 2017 திசெம்பர் 22 திகதி வரையும் குழு ஒன்று நியமனம் செய்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 செப்தெம்பர் 19 ஆம் திகதிய 1/2016 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி மற்றும் 2016 மார்ச் 17 ஆம் திகதிய 01/2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை யின் 04 ஆம் பந்தி | 2,637,295 | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையின், கீழ் பல்வேறு தொகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு இணைப்பதற்கு மற்றும் வாகன தேக்கத்திற்கு மாத்திரம் வாகனங்கள் பெற்றுக் கொள்ள முடியும். எனினும் குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த வாகனம் ஒன்று பிரதி அமைச்சரின் தேவைக்காக பயன்படுத்தி 2017 ஜனவரி முதல் 2018 மே வரை காலப்பகுதிக்காக ரூபா 2,637,295 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

### இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

அமைச்சின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணிகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளுக்குரிய வேதன செலவினத் தொகுதிக்காக ரூபா 547.31 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 457,233 தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 29 | 26 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 05 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 659 | 542 | 117 |
| (iv) | ஆரம்ப நிலை | 587 | 511 | 76 |
| (v) | (அமைய/ஒப்பந்த | - | 113 | - |
| | மொத்தம் | 1,281 | 1,197 | 197 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) முறையற்ற விதமாக வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணி பதிவேட்டின் பிரகாரம் கலாச்சார மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் 13 பேரும், அபிவிருத்தி உத்தியோகத்தர் 18 பேரும்,

நிலைய அலுவலக உதவியாளர்கள் 35 பேரும், வெற்றிடமாக காணப்பட்ட போதும் கலாச்சார மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் 3 பேரும் தகவல் உத்தியோகத்தர் ஒருவரும், நிலைய, அலுவலக உதவியாளர் ஒருவரும், கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தில் நாட்டார் இன பாதுகாப்பு நிலையத்தின் சேவையில் ஈடுபடுத்தி இருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்காக 2016 ஆண்டின் போது 1,776,842 தொகையும், 2017 ஆண்டின் அக்தோபர் மாதம் வரை ரூபா 2,005,082 தொகையும் அமைச்சினால் சம்பளம் செலுத்தியிருந்தது. அதே போல் காலி உரிமை மன்றத்திற்கான கலாச்சார மேம்பாட்டு உத்தியோத்தர்கள் மூவர் விடுவிக்கப்பட்டிருந்நததுடன் அதற்காக 2016 ஆண்டின் போது ரூபா 965,387 தொகையும், 2017 நவம்பர் மாதம் வரை ரூபா 857,148 தொகை சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) வேறு தரப்பினரிடம் பெற்றிருந்த மனித வளங்கள்**

மத்திய கலாச்சார நிதியத்திற்கு சொந்தமான புகைப்பட கலைஞர் ஒருவர் 06 வருட காலம் முதலும் தொழிலாளர் ஒருவர் 02 வருட காலமாகவும் அமைச்சின் கடமைகளுக்காக ஈடுபடுத்தியிருந்ததுடன் அந்த இரண்டு உத்தியோகத்தர்களும் 2018 ஜனவரி அளவில் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் நாட்டார் இன பாதுகாப்பு நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.